**புத்தசாசன நிதியம் - 2019**

-----------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தசாசன நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்குகள், நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 35 ஆம் இலக்க புத்தசாசன நிதியச் சட்டத்தின் 12 (4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் சம்பந்தபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள ் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகார சபை தொடர்ந்தியங ்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபை செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் காணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. .

| | விடயம் | தொகை ரூபா. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பணம் செலுத்தல் | 4,260,906 | வாடிக்கையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது | ரூபா. 4,360,906 ஆன கொடுப்பனவுகளுக்கு உரிய வவுசர்களில்,<br>➢ முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>➢ மேலதிக கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து செலவினங்கள் பெறப்பட்டமைக்கான சான்று பெற்றுக் கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட முடியும்.<br>➢ வைத்திய உதவி கொடுப்பனவுகள் பலவற்றின் ரசீதுகள் பெறப்பட்டுள்ளதுடன், தனியே கோப்பொன்றில் அவ் ரசீதுகள் இணைக்கப்பட்டுள்ளது.<br>➢ சுகாதார செயற்திட்டத்தின் கீழ் பணம் செலுத்தல் உறுதி செய்தலானது மேற்கொண்டு கணக்காய்விற்கு | கொடுப்பனவு செய்யப்பட்டமை சான்றுப்படுத்தக் கூடிய வகையில் வாடிக்கையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது குறித்த வவுசருடன் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது.<br>➢ சீனா மொழி செயற்திட்டத்தின் கொடுப்பனவுகளுக்குரிய ரசீதுகளின் பிரதிகள் இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுப்பவனவுகளின் ரசீதுகள் பெற்றுக் கொள்வதற்கு தெவையான ஆலோசனைகள் உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பௌத்த மத நூல்கள் | 6,953,882 | மீளாய்வு குழு அறிக்கைகள் | மீளாய்வு குழுவொன்று நியமிக்கப்பட்டு 2022 ஆண்டிற்குரிய நூல்களின் மீள்ாய்வொன்று மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | மீளாய்வொன்று மேற்கொண்டு அறிக்கைள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | சுனாமி உதவி | 1,348,796 | விரிவான தகவல்கள் | சுனாமி உதவியாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 1,348,796 ஆன மீதி 2007 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவி வரும் மீதியொன்றாகும். | மீதிகள் உறுதி செய்யப்படக் கூடிய தகவ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமணத்தின் 396 ஆம் நிதி பிரமாணம் | 2013 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதியத்தினால் வழங்கப்பட்ட, கூட்டுத்தொகை ரூபா 56,863 ஆன 07 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அறிக்கை திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ் 07 காசோலைகளும் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முடியும் என்பதனால் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைத்து அறிக்கையிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.7.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டு பகுப்பாய்வு சமர்ப்பித்திராத ரூபா 13,031,828 ஆன முற்பணம் மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகள் ரூபா 1,087,447 ஆன தொகை 06 ஆண்டுகளுக்கு மற்றும் ரூபா 11,944,381 ஆன தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான மீதிகள் என கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் அம் மீதிகளை அறவிடல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அம் மீதிகள் 2023 ஆம் ஆண்டினுள் அறவிடப்படுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக நிலவி வரும் மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டு பகுப்பாய்வு சமர்ப்பித்திராத ரூபா 1,712,435 ஆன நடைமுறை பொறுப்பு மீதியில் ரூபா 1,168,025 ஆன 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையான மீதிகள் காணப்பட்டதுடன் அம் மீதிகள் தீர்ப்பதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அம் மீதிகள் 2023 ஆம் ஆண்டினுள் தீர்ப்பதற்கு அல்லது ஒருங்கிணைந்த நிதிக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்ட காலமாக நிலவி வரும் மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 371 (2) பிரகாரம் ஒரு குறித்த பணியொன்றிற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட இடைக்கால கட்டுநிதி குறித்த பணி நிறைவடைந்த பின்னர் தீர்க்கப்பட்ட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் முற்பணம் தீர்க்கப்படுவதற்கு 14 நாட்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த 10 சந்தர்ப்பங்கள் மீளாய்வாண்டில் காணப்பட்டதுடன் முற்பணம் தீர்க்கும் வரையில் பணம் கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், முற்பணம் செலுத்தும் போது குறித்த பணம் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்கு கொடுப்பனவு பெறப்பட்டவர்களின் கையொப்பம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை வவுசர் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இந்த குறைப்பாடு சீர் செய்வதற்கும் எதிர்காலத்தில் அவ்வாறான குறைப்பாடு ஏற்படாதிருக்கவும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. | முற்பணங்கள் செலுத்தல் மற்றும் தீர்த்தல் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 47,513,190 ஆன மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முந்தைய ஆண்டின் மிகை ரூபா 41,593,654 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 5,919,536 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் முதலீட்டு வருமானம் அதிகரித்தமையும் புதிய வளர்ப்புப் பராமரிப்பாளர்களின் பங்களிப்பு மற்றும் சுத்திகரிப்பு பணிகளுக்கான உதவித்தொகை குறைந்தமையும் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 264 இல் கூறப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் அனைத்து கொடுப்பனவுகளினதும் வவுசரில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை பெறப்பட்டமை வாடிககையாளரிடமிருந்து பெறப்பட்ட, (தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உரிய முத்திரை பதிக்கப்பட்ட) ரசீது ஒன்றினால் எறுதி செய்யப்பட வேண்டிய போதிலும் பல கொடுப்பனவு வவுசர்களுடன் ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிய ரசீதுகள்/ பற்றுச்சீட்டுகள் பரீட்சிக்கப்படாது இணைக்கப்பட்டிருந்தது. | புதிய நிறுவன கொடுப்பனவு தொடர்பாக இந்த விசாரணை கோரப்பட்டிருந்ததுடன் புதிய நிறுவன கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவது முன்னர் மேற்கொண்ட கொடுப்பனவு பெறப்பட்டமைக்கு ரசீது பெறப்பட்ட பின்னர் மட்டுமாகும். அதன் பிரகாரம் முன்னர் மேற்கொண்ட கொடுப்பனவுக்கு உரிய ரசீது பெறப்பட்டமை உறுதி செய்யப்படக் கூடிய வகையில் புதிய கொடுப்பனவு வவுசருக்கு ரசீது இணைக்கப்பட்டுள்ளது.<br><br>நிகழ்கால கொடுப்பனவுகளுக்கு உரிய ரசீதின் பிரதியொன்று குறித்த கொடுப்பனவு வவுசருக்கு இணைக்கப்படும். 2022, 2021 மற்றும் 2020 ஆண்டுகளுக்கு உரியதாக அச் சீர் செய்தல்கள் மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் பிரகாரம், குறித்த கொடுப்பனவு பெறப்பட்டமை உறுதி செய்யப்படக் கூடிய வகையில் வாடிக்கையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரசீது அதற்குரிய வவுசருடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் ரூபா 57,550,091 ஆன தொகை நிதியத்தின் வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 10,036,901 ஆன தொகை, அதாவது 17 சதவீதம் மட்டுமே நிதியத்தின் நோக்கத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும், வருடாந்தம் மிகையாகின்ற தொகை முதலிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் மொத்த முதலீட்டு பெறுமதி ரூபா 559,016,242 ஆக காணப்பட்டது. புத்த சாசனத்தினை பாதுகாத்தல் மற்றும் போசித்தல் போன்ற மிகவும் பயனுள்ள பணிகளுக்காக நிதியை ஈடுப்படுத்தல் நிதியத்தின் பணிப்பொறுப்பாக காணப்பட்ட போதிலும், வருடாந்தம் நிதியத்திற்கு பெறப்படுகின்ற வருமானத்திற்க நிகரான வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நிதியம் தவறியிருந்தது. | எதிர்காலத்தில் நிதியத்திற் பெறப்படுகின்ற வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு அதற்கு நிகரான வகையில் வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதற்கு முன்மொரியப்பட்டுள்ளது. | நிதியத்திற்கு பெறப்படுகின்ற வருமனத்திற்கு நிகரான வகையில் வேலைத்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 திசெம்பர் 22 திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கயின் 15 ஆம் பந்தி ஊடாக உள்ளடக்கப்பட்ட நிதி பிரமாணம் 877 (2) (ஈ) பிரமாணத்தின் பிரகாரம் கணக்கு ஆண்டு நிறைவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள், இரண்டு ஆண்டுகளும் 09 மாதங்களும் ஆக, கால தாமதத்தின் பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தினால் இந்த இறுதி கணக்கு சமர்ப்பிப்பதில் தாமதமொன்று ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் உரிய கால வரையறைக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் உரிய திகதிக்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |